3. ஒழுங்குப் பிரச்சினை

அந்நியர்கள் பேரவை புறக் கூடங்களுக்கு வருதல்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.ஐ.டி.யு.சி. தலைவரும், எங்கள் தலைவருமான திரு. கே.என். சுந்தரம் அவர்கள் வந்திருக்கிறார்கள். நம்முடைய காவலர்கள் அவரை அவமானப் படுத்துகின்ற முறையில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. என். சுந்தரம் அவர்களை எனக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும். ஆனால் வருகிறவர்கள் யார் யார் என்பது காவலர்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. இந்தச் சபையைச் சுற்றி ஓரளவிற்குத் தான் இடம் இருக்கிறது. பார்லிமெண்டைப் போல் இங்கே சென்ட்ரல் ஹால் இல்லை. உறுப்பினர்களைத் தவிர பேரவை மண்டப அமைப்புக்குள் யாரையும் அனுமதிக்கக் கூடாது என்று நாங்கள் காவலர்களுக்கு கட்டளையிட்டிருக்கிறோம். இல்லாவிட்டால் எல்லோரும் உள்ளே வருவார்கள். இதை எல்லோருக்குமே பொதுவாக எல்லா உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் உள்பட சொல்கிறேன். தங்கள் தங்களுக்கு வேண்டியவர்களை அவர்கள் தங்களது கட்சி அறையிலே சந்திக்கலாம் : அல்லது தங்களது அலுவலகத்தில் சந்திக்கலாம். பேரவைக்கு அழைத்து வந்து விடுகிறபோது இதுபோன்ற பிரச்சினை எழும். எனவே உறுப்பினர்கள் அனைவரும், கட்டுப்பாடாக யாரையும் இங்கு அழைத்து வராது பேரவைத் தலைவருடன் ஒத்துழைக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : சட்டையைப் பிடித்து இழுக்க வேண்டிய நெசசிடி என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்கவும், அது சரியல்ல. திரு. கே. என். சுந்தரத்தை எனக்குத் தெரியும். உறுப்பினர்களைத் தவிர வேறு யார் இங்கே வந்தாலும் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிதான் இருக்க வேண்டும். காவலர்களும் தொழிலாளர்கள்தான் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

[முற்பகல் 10-20]

திரு. இரா. கருப்பையா : அமைச்சரை சந்திக்க வேண்டுமென்று வருகிறார்கள் ; இங்கு வரக்கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்களைச் சந்திக்க வேண்டுமென்றால் அவர்களது அறைக்குச் சென்று சந்திக்க வேண்டுமே தவிர, பேரவை மண்டபத்திற்குள் வந்து சந்திக்கக் கூடாது. இப்படி வருகிறவர்களை பேரவையின் 'லாபி'க்குள் அனுமதித்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பது இயலாது.

திரு. மு. அம்பிகாபதி : வருகிறவர்களை எப்படிச் சொல்லி அனுப்புவது ? பேசிக் 'பிரின்சிபிள்'—அனுமதிக்கப்படுவதில்லை என்பதையும் நயமாக எடுத்துச் சொல்லுகிற முறை வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழில் நளினமாகப் பேசுவது எப்படி, வல்லமையாகப் பேசுவது எப்படி என்றெல்லாம் சொல்லிக் கொடுக்கலாம் ; காவலர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்குத் தேவையானால் பாடம் கற்றுக்கொடுக்கலாம்.

4. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித்துள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது :—

1. 1980ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980).

2. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முனவடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980).

3. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் திருத்தம் சிறப்பு விதித்துறைகள் திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980).

(ஆ) மதுரை-காமராஜ் பல்கலைக்கழகப் பேரவை தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை—காமராஜ் பல்கலைக் கழகப் பேரவையில் (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) எஸ். பாலகிருஷ்ணன், (2) வீ. எம். சுப்பிரமணியம், (3) என். தனசேகரன், (4) அ. இரகுமான்கான் ஆகியோரின் பதவிக்காலம் 17—5—1980 ஆம் நாளுடன் முடிவடைவதால், பல்கலைக்கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை-காமராஜ் பல்கலைக்கழகம்